உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# சபை சரித்திரம்

## ( ஏழு சபைகளும், ஏழு தூதர்களும் )

பாடம் - 45



# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 45

## சபை சரித்திரம்

### ( ஏழு சபைகளும், ஏழு தூதர்களும் )

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

**சபைக்கு சரித்திரம் உண்டா ?**

ஆம், சபைக்கு ஒரு சரித்திரம் உள்ளது, அதை தேவன் மாத்திரம் அறிந்திருக்கிறார். ஏனெனில், அவர் –

**"...இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டு..." (ஏசாயா 46 : 10)** அறிந்திருக்கிறார்.

மேலும், அதை அவர் முதன்முதலில் இயேசுவிற்கு அவருடைய உயிர்த்தெழுதலுக்கு பின்பு வெளிப்படுத்தினார், பின்பு அவர் தம்முடைய சரீரமாகிய – சபைக்கு அதை வெளிப்படுத்தினார்.

இவைகளைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்,

**வெளிப்படுத்தல் 1 : 1**

**"சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும் இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்."**

ஆம், வெளிப்படுத்தின விசேஷ புத்தகமானது "அடையாளங்களில்" எழுதப்பட்டு, **சபையின் சரித்திரத்தை** பெருமளவில் பெற்றுள்ளது.

ஆம், அவை **"...யோவானுக்கு (அடையாளங்களின் மூலம்) வெளிப்படுத்தின..."** புத்தகமாகும்.

சபையானது "பரலோக இராஜ்யம்" என்று மத்தேயு சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அதன் ஆரம்பக்கால சரித்திரமும் கொடுக்கப்பட்டுள்ளதை வாசிக்கிறோம்,

**மத்தேயு 13 : 24**

**"...பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது."**

இங்கு, உவமை பாஷையில் எழுதப்பட்டிருக்கும் இவ்வசனப்பகுதியில், இதையும் சேர்த்து **மத்தேயு 13 –ஆம் அதிகாரத்தில்** காணப்படுகிற **ஏழு உவமைகளிலும், சபையானது**

**"பரலோக ராஜ்யம்"**

என குறிப்பிடப்பட்டுள்ளதை காண்கிறோம்.

இது தேவனுடைய இராஜ்யத்தின் ஆவிக்குரிய (கண்ணுக்கு புலப்படாத) பாகத்தில்

**"இராஜாக்களும் ஆசாரியர்களுமாக"**

நியமிக்கப்படுவதற்கான "அழைப்பை" பெற்று, மாம்சத்திலிருக்கும் சபையை குறிக்கிற வசனமாகும். இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்,

**வெளிப்படுத்தல் 1:6** - **"...தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக."**

உண்மையில், தேவனுடைய இராஜ்யத்தில் இயேசு கிறிஸ்துவின் தலைமைக்கு உட்பட்ட **"புதிய வானமாக"** இவர்கள் இருப்பார்கள்.

தொடர்ந்து நாம் வாசிப்பது,

**"...ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது..."**

ஆம், இது சபைக்கு தலையானவரும், அதை நிறுவினவருமான –

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், சபையாவதற்கான அழைப்பை அவர் துவங்கி வைத்ததையும் குறிக்கிறது.

மேலும், நாம் வாசிக்கையில்,

**"...நல்ல விதைகளை விதைத்த..."**

இது தேவனுடைய வார்த்தைகளாகிய வசனத்தையும், இராஜ்யத்தின் சுவிசேஷத்தையும் குறிப்பதாக நாம் வாசிக்கிறோம்,

**லூக்கா 8 : 11 - "அந்த உவமையின் கருத்தாவது – விதை தேவனுடைய வசனம்."**

மேலும், நாம் தொடர்ந்து வாசிக்கையில்,

**"...தன் நிலத்தில்..."**

இந்த "நிலம்" என்பது இவ்வுவமையில் உலகத்தைக் குறிக்கிற அடையாளம் என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிந்திருக்கிறோம்.

**மத்தேயு 13 : 38 - "நிலம் உலகம்"**

ஆம், இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மற்றும் சில சீஷர்களை கொண்டு சபை நிறுவப்பட்டதை குறிக்கிறது.

**இந்த சபையானது படிப்படியாக வளர்ந்து, கிட்டதட்ட 2000 வருடங்களுக்கு பழமையான சரித்திரத்தை கொண்டிருக்கிறது.**

ஆம், இந்த சபையின் சரித்திரம் தீர்க்கதரிசனமாக நம்முடைய கர்த்தர் இயேசு மூலம் வெளிப்படுத்தப்பட்டு, இரண்டு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவை,

**வெளிப்படுத்தின விசேஷம் ⟷ மத்தேயு சுவிசேஷம்**



இப்பொழுது நாம் பின்வரும் வசனப்பகுதியை வாசித்து துவங்குவோம்.

**வெளிப்படுத்தல் 1:12,13**

**"...திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷ குமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்."**

**வசனம் 16 – "...தனது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்..."**



இதுவே நம்முடைய இன்றைய ஆராய்ச்சிக்கான திறவுகோலாகும்.

**"..ஏழு பொன் குத்துவிளக்குகளும்..." - "...ஏழு நட்சத்திரங்களும்...", "மனுஷ குமாரனுக்கொப்பானவருடைய வலது கரத்தில் இருந்தது."**

**இது எதைக் குறிக்கிறது ?**

இது வெளிப்படுத்தின விசேஷம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இங்கு "மனுஷ குமாரனுக்கொப்பானவர்" என்பது நாம் அனைவரும் அறிந்திருக்கிறபடி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிற அடையாளமாயிருக்கிறது.


**இப்படியிருக்க, மற்ற அனைத்தும் எதைக் குறிக்கிறது ?**

இந்த அடையாளங்களுக்கான பதில் அதே அதிகாரத்தில் வசனம் 20-ல் விவரிக்கப்படுள்ளதை காண்கிறோம்.

**வசனம் 20 – "என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நடசத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது, அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம், நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்."**

பார்த்தீர்களா, இந்த விஷயத்தை ஒரு தரிசனத்தில் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு இயேசு விளக்குவதை காண்கிறோம்.

**அவர் "ஏழு சபைகளையும்" – "ஏழு தூதர்களையும்" குறித்து பேசுவதை காண்கிறோம். இது எதைக் குறிக்கிறது ?**



**ஒருவேளை, இயேசுவிற்கு "விசேஷமான" ஏழு சபைகள் இருக்கக்கூடுமோ ?**

ஏனெனில், இன்று இதுபோல் பல்லாயிரம் கிறிஸ்தவ பிரிவுகள் சபைகளில் காணப்படுகிறது.

**எனவே, இதையும் அப்படியே நாம் புரிந்துகொள்ளவேண்டுமா ?**

இதற்கான பதிலை கீழே நாம் காண்கிறோம்.

**வெளிப்படுத்தல் 1 : 13**

**"அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்."**

பார்த்தீர்களா, இது "பொன்குத்துவிளக்குகள்" குறிக்கிற ஏழு

சபைகளுக்கு மத்தியிலும், அவைகளுடனும் இயேசு இருப்பதை சித்தரிக்கிறது.

இங்கு, **"அவைகளுக்கு மத்தியில்"** என்பது நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளை அடையாளப்படுத்துவதை நாம் வாசிக்கிறோம்.

**மத்தேயு 28:20**

**"....இதோ, உலகத்தின் (யுகத்தின்) முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்."**

**இங்கு – "இந்த உலகத்தின் முடிவுபரியந்தம்" – என்ற வார்த்தைகளை கவனிக்கவும்.**

எனவே, இந்த காட்சியானது இந்த "ஏழு சபைகளோடு" சுவிசேஷ யுகம் முழுவதும் இயேசு இருப்பதை அடையாளப்படுத்துகிறது.

**இதன் மூலம், "ஏழு சபைகள்" என்பது தனித்தனியான ஏழு சபைகளைக் குறிக்காமல் மாறாக, சுவிசேஷ யுக சபையாகிய அந்த ஒரே சபை கடந்து வரும் ஏழு காலப்பிரிவுகளைக் குறிக்கிறது.**

ஆம், இந்த "ஏழு சபைகள்" அல்லது சபையின் ஏழு காலப்பிரிவுகளும், கர்த்தர் மூலம் தனித்தனியாக பெயர் சூட்டப்பட்டிருப்பதை பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கலாம்.

**வெளிப்படுத்தல் 1 : 11**

**"அது – நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது."**

ஆம், அந்த வேறுபபட்ட காலப்பகுதிகளில் காணப்படும் நிலை மற்றும் சம்பவங்களை கர்த்தர் முன்பே அறிந்தவராக இருந்து அந்த "சபைகளுக்கு" தேவையான எச்சரிப்பு மற்றும் ஊக்கமான அறிவுரைகளை வெளிப்படுத்தலின் 2 –ஆம் மற்றும் 3 –ஆம் அதிகாரங்களில் பதிவு செய்திருக்கிறார்.

**(அவையனைத்தும் விளக்கப்படுவதற்கு அதிக நேரம் தேவைப்படுவதால், அவைகளைக் குறித்த விபரங்களை இன்று நாம் காணாமல், அதை தனிப்பட்ட தியானத்திற்கு விடுகிறோம்.)**

இப்பொழுது, அந்த சுவிசேஷ யுக சபையின் ஏழு காலப்பிரிவுகளை நாம் அடையாளம் கண்டு, புரிந்துகொள்ள முயற்சிப்போம்.

அவைகளின் விபரங்களை வேதம் நமக்கு நேரடியாக தருவதில்லை.

ஆனால், இந்த **"ஏழு சபைகளை"** குறித்து அறிந்துகொள்ள **வெளிப்படுத்தலின் 2-ஆம்** மற்றும் **3-ஆம் அதிகாரங்களை** தியானிப்பதின் மூலம் **வேதமாணவர்கள் சில வசனங்களையும், சரித்திர நிகழ்வுகளையும்** வைத்து காலங்களைக் குறித்து சில தீர்மானங்களுக்கு வந்திருக்கின்றனர்.

இப்பொழுது நாம் அந்த "ஏழு சபைகளையும்" அவைகளின் காலப்பிரிவுகளையும் குறித்து ஒவ்வொன்றாக காண்போம்.




**வெளிப்படுத்தல் 2 : 1**

**"எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்..."**

ஆம், இது அந்த "ஏழு சபைகளுக்குள்" கர்த்தர் முதலாவது பெயரிட்ட சபையாகும். இதன் காலக்கட்டம் **கி.பி.33**–ஆம் வருடம் பெந்தெகொஸ்தே நாளில் துவங்கி, **கி.பி.70** –ஆம் வருடத்தில் எருசலேம் விழுந்தபொழுது முடிவுக்கு வந்தது.

சிலர் இந்த சபை காலக்கட்டம் **கி.பி. 74**-ஆம் வருடம் துவங்கியதாக கருதுகின்றனர்.

ஆனால், அது **கி.பி. 70**-ஆம் வருடமே துவங்கியது என்பதற்கு ஆதாரமாக பின்வரும் வசனத்தை நாம் காண்கிறோம் –

**வெளிப்படுத்தல் 8:8**

**"இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது...."**

ஆம், இது **இரண்டாம் எக்காளத்தைக்** குறிக்கிறது.



**"...அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது..."**

ஆம், அடையாள பாஷையில் இது **கி.பி. 70**-ஆம் வருடம் **ரோமர்களுடைய படையெடுப்பின் மூலம் எருசலேம் அழிவுக்கு** வந்தபொழுது, தன்னுடைய இறுதியான **நியாயத்தீர்ப்புகளுக்கு ("அக்கினி")** மத்தியில் இருந்த பெரிய தேசமாகிய **இஸ்ரயேலை ("பெரிய மலை")** குறிக்கிறது.

இரண்டாம் சபையின் காலக்கட்டம் அப்பொழுது துவங்குவதை காண்பதின் மூலம், முதலாம் சபையின் காலக்கட்டம் அப்பொழுதே

முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்பதை காண்கிறோம்.

இதன் அடிப்படையிலேயே இந்த காலப்பகுதி அப்போஸ்தலர்கள் உயிரோடிருந்து சபையை வழிநடத்தின காலப்பகுதி என்று நாம் புரிந்துகொள்ளக் காரணமாகும்.



ஆகையால், சபையின் இந்த காலக்கட்டத்தை நாம் **"அப்போஸ்தலர்களுடைய காலப்பகுதி"** என்று அழைக்கிறோம்.




## வெளிப்படுத்தல் 2 : 8

**"சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்..."**

ஆம், இந்த சபை காலப்பகுதியின் துவக்கம் எபேசு சபையின் காலப்பகுதி முடிவுக்கு வந்தபொழுது துவங்கியதை நாம் ஏற்கனவே கண்டிருந்தோம்.

இப்படியிருக்க, இந்த சபை காலப்பகுதியின் முடிவு பின்வரும் வசனத்தின் மூலம் அடையாளம் காணப்படுகிறது

## வெளிப்படுத்தல் 2 : 10

**"....பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள், ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு..."**

இங்கு, தீர்க்கதரிசனத்தில் காணப்படுகிற இந்த **"பத்து நாட்கள்"** என்பது, **பத்து வருடங்களுக்கு** சபையின் மீது அனுமதிக்கப்படுகிற **"உபத்திரவத்தை"** குறிக்கிறது.



**இது சரித்திரத்தில் கிபி 303 முதல் கிபி 313-ஆம் ஆண்டு வரை உள்ள காலப்பகுதியாகும்.**

இந்த நாட்களில் கான்ஸ்டான்டின் **(CONSTANTINE)** சக்கரவர்த்திக்கு முன்பு ஆட்சியிலிருந்த – **டையகிலோஷியன் (DIOCLETIAN)** ஆளுகை செய்த நாட்களில் ரோமர்கள் கிறிஸ்தவர்களை கடுமையான உபத்திரவத்திற்கு உள்ளாக்கினர்.



இதன்மூலம், இந்த "சபையின்" காலப்பகுதி இந்த "பத்து வருட உபத்திரவ" காலத்திற்கு பின்பு **கி.பி. 313**-ஆம் வருடத்தில் முடிவுக்கு வந்ததை காண்கிறோம்.




**வெளிப்படுத்தல் 2 : 12**

**"பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்..."**

ஆம், இந்த மூன்றாவது சபையின் காலப்பகுதி அந்த **"பத்து வருட உபத்திரவ"** காலத்தின் முடிவில் **கி.பி. 313** -ஆம் வருடத்தில் துவங்கியது.

இந்த காலப்பகுதி எவ்வளவு நாட்கள் நீடித்து முடிவுக்கு வரும் என்பதை பின்வரும் வசனங்களின் மூலம் அடையாளம் காணப்படுகிறது

## வெளிப்படுத்தல் 2 : 21

**"அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன்..."**

இங்கு, "அவள்' என்பதும், "மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன்" என்பதற்குமான பொருள் என்ன ?

வசனம் 20-ல் உள்ள வார்த்தைகளை வாசிக்கையில்,

**"....தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும்...."**

இங்கு, **யேசபேல்** என்று அழைக்கப்படுகிற **"ஸ்திரீயானவள்"** பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்கதரிசியாகிய எலியாவின் நாட்களில் ஆளுகை செய்த **ஆகாப் இராஜாவின் மனைவியாகிய யோபேலை** குறிப்பதற்கு வாய்ப்பில்லை.

**இந்த "யேசபேல்"** இங்கு **மதம் – அரசியல்** ஆகிய அமைப்புகளின் **ஒருங்கிணைப்பை நடைமுறைப்படுத்திய** துன்மார்க்கமான **பெயர்சபை** அமைப்புகளை குறிப்பதற்கான அடையாளமாகும்.



இதை பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதை காண்கிறோம்.

**வெளிப்படுத்தல் 17:5**

**“மேலும் இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.”**

ஆம், “அவள்” மகா பாபிலோன் என்று அழைக்கப்படுகிறாள்.

இது தீர்க்கதரிசியாகிய **எலியா** தேவனுடைய உண்மையும் விசுவாசமுள்ள **சபைக்கு நிழலாக** காண்பிப்பதுபோல.....

...இந்த **“யேசபேலும்”** துன்மார்க்கமும் அவிசுவாசமுமான பெயர் சபையாகிய **அந்திக்கிறிஸ்து அமைப்பிற்கு நிழலாக** இருக்கிறாள். மேலும், இந்த அமைப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**“திரளான தண்ணீர்கள் மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசி...”**
**(வெளிப்படுத்தல் 17 : 1)**

இங்கு, “வேசி” என்பது ஆவிக்குரிய காரியங்களில் உண்மையாயிராத “பாபிலோனை” குறிக்கிறது.

இந்த பாபிலோன் தன்னுடைய உண்மையில்லாத நிலையிலிருந்து மனந்திரும்ப சீர்த்திருத்தலின் காலத்திற்கு முன்பு தேவன் அதற்கு தவணைக்காலம் கொடுத்தார்.

## இந்த தவணைக்காலம் எதுவரை நீடித்திருந்தது ?

இதைக் குறித்து நாம் வாசிக்கையில்.....அது – **“காலம்” (Time)** என்று **NIV** மொழிபெயர்ப்பில் குறிப்பிடப்படுள்ளதை காண்கிறோம். இதற்கு நிகரான கிரேக்க வார்த்தை – **chromos (கிரேக்க எண் – 5550)** ஆகும்.

இதற்கு **“ஒரு காலப்பகுதி”** என்று பொருள்.

வெளிப்படுத்தின புத்தகத்தில் **“காலம்”** என்ற தீர்க்கதரிசன வார்த்தையானது **360 தீர்க்கதரிசன நாட்களை** கொண்ட ஒரு **தீர்க்கதரிசன வருடத்தைக் குறிக்கும்.** இது 360 சொல்லர்த்த வருடங்களைக் குறிக்கும்.

**சீர்த்திருத்தல் கிபி 1517-ஆம் வருடம் அக்டோபர் 31-ஆம் தேதியன்று துவங்கியது.** இதன்மூலம், இந்த துவக்கத்திற்கு 360 வருடங்கள் முன்பாக செல்வோமானால், அந்த வருடம்

**1517 — 360 → 1157**

ஆம், அந்த "காலம்" துவங்கிய வருடமாக இது இருக்கிறது. மேலும் அப்பொழுது, "யேசபேல்" மனந்திரும்ப தேவன் தவணை காலம் கொடுப்பதை காண்கிறோம்.

மேலும், இந்த வார்த்தைகள் நான்காவது "சபை காலப்பகுதியாகிய" தியத்தீராவில் **(வெளிப்படுத்தல் 2 : 21)** சொல்லப்பட்டிருப்பதால், இந்த வருடத்தில் தியத்தீராவின் காலப்பகுதி துவங்கியதாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.

மட்டுமல்லாது, இந்த வருடத்திலேயே இதற்கு முந்தைய சபையின் காலப்பகுதியாகிய பெர்கமு முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.




## வெளிப்படுத்தல் 2 : 18

**"தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்..."**

இந்த நான்காவது சபையின் காலப்பகுதி, இதற்கு முந்தைய சபையின் காலப்பகுதி முடிவடைந்த **கி.பி. 1157** வருடம் துவங்கியிருக்க வேண்டும்.

**இப்படியிருக்க, இந்த சபையின் காலப்பகுதி முடிவுக்கு வந்தது எப்பொழுது ?**

நான்காவது காலப்பிரிவாகிய இந்த காலப்பகுதியின் முடிவு இதற்கு அடுத்த "சபையின்" காலப்பிரிவோடு தொடர்புடைய வசனத்தில் காணப்படுகிறது.

## வெளிப்படுத்தல் 9:5

**"மேலும் அவர்களைக் கொலை செய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்துமாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது...."**

இந்த **"ஐந்து மாதங்கள்"** என்பது ஐந்தாவது எக்காளம் ஊதப்பட்ட காலப்பகுதியில் நிறைவேறுகிற ஏதோ ஒரு தீர்க்கதரிசன காலப்பகுதியைக் குறிக்கிறது. மேலும், இது ஐந்தாவது சபையின் காலப்பகுதியோடு தொடர்புடையதாக இருப்பதையும் கீழே வாசிக்கிறோம்.

## வெளிப்படுத்தல் 9:1-3

**"ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது வானத்திலிருந்து பூமியின் மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன், அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது, அவன் பாதாளக்குழியைத் திறந்தான், உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று. அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது, அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது."**

இவையனைத்தும், அவைகளின் பொருளையும் இன்று நாம் தியானிக்கபோவதில்லை. ஆனால், இப்போதைக்கு இது **ஐந்தாம் சபையின் காலப்பகுதியானது "ஐந்து மாதங்கள்" என்ற தீர்க்கதரிசன காலப்பகுதியை உடையதாக** இருப்பதை உணர்ந்து கொள்ள போதுமானதாகும்.

இந்த 'ஐந்து மாதங்கள்" என்பது,

**5 X 30 → 150 "தீர்க்கதரிசன நாட்கள்"**

**மேலும், 150 தீர்க்கதரிசன நாட்கள் = 150 சொல்லர்த்தமான வருடங்கள்.**

இதன்மூலம், சீர்த்திருத்தலின் வருடமாகிய 1517 –லில் முடிவுக்குவரும் **"சர்தை"** என்ற ஐந்தாம் சபையின் காலப்பகுதி **150 வருடங்களுக்கு முன்னதாக** துவங்கியிருக்க வேண்டும்.

**1517 — 150 → 1367**

இதன்மூலம் **கி.பி. 1367** –ஆம் வருடம் என்பது **“சர்தை”** சபையின் காலப்பகுதி **துவங்கிய வருடமாகவும்,** அதற்கு முந்தைய…**தியத்தீரா** சபையின் காலப்பகுதி **முடிவடைந்த வருடமாகவும்** இருக்கிறது.




**வெளிப்படுத்தல் 3 : 1**

**“சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்…”**

ஆம், இந்த **ஐந்தாவது சபையாகிய சர்தை** காலப்பகுதியின் துவக்கமும் முடிவும் இதற்கு முந்தைய சபையின் காலப்பகுதிகளாகிய **பெர்கமு** மற்றும் **தியத்தீராவின்** ஆராய்ச்சியில், **வெளிப்படுத்தல் 9 : 5** –ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்ட **“ஐந்து மாதங்கள்”** அல்லது **150 சொல்லர்த்த வருடங்கள்** கணக்கிடப்பட்டதில் கண்டோம்.

ஆம், அது கிபி 1367 –ஆம் வருடம் துவங்கி சீர்த்திருத்தல் துவங்கின வருடமாகிய கிபி 1517 –ஆம் வருடம் முடிவுக்கு வந்தது.




**வெளிப்படுத்தல் 3 : 7**

**“பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்…”**

ஆம், இது சீர்த்திருத்தலின் வருடமாகிய கிபி 1517 துவங்கிய சபை காலப்பகுதியாகும்.

**இது எப்பொழுது முடிவுக்கு வருகிறது ?**

சீர்த்திருத்தலின்போது துவங்கிய சபையின் இந்த ஆறாவது காலப்பிரிவு இரண்டு வசனங்களை ஒப்பிடுவதின் மூலம் அடையாளம் காணப்படுகிறது.

**வெளிப்படுத்தல் 3 : 11**

**“இதோ, சீக்கிரமாய் வருகிறேன்...”**

**வெளிப்படுத்தல் 3 : 20**

**“இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்....”**

இதை பார்த்தீர்களா ?

இதை வாசிக்கையில் ஆறாவது சபையின் காலப்பகுதியின்போது கர்த்தர்..... தம்முடைய இரண்டாம் வருகைக்கு வெகு அருகாமையில் இருப்பதாகவும்.....

....ஏழாவது சபையின் காலப்பகுதியில் அவர் உண்மையிலேயே வந்திருந்து பிரசன்னமாகியிருப்பார் என்றும் அறிவிக்கிறார்.

ஆம், இந்த 1874 –ஆம் வருடம் ஆறாவது சபை காலப்பகுதி முடிவடைந்து, ஏழாவது சபையின் காலப்பகுதி துவங்கியது.




**வெளிப்படுத்தல் 3 : 14**

**“லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்...”**

ஆம், சபையின் ஏழாவதும், கடைசியுமான காலப்பிரிவானது கர்த்தருடைய இரண்டாம் வருகையின் வருடமாகிய 1874 –ஆம் ஆண்டு துவங்கியது.

இந்த லவோதிக்கேயா சபையின் காலப்பகுதி முழுவதும் திரும்ப வந்திருக்கும் இராஜா பிரசன்னமாயிருக்கிறார்.

**இந்த சபையின் காலப்பகுதி முடிவுக்கு வரும் வருடத்தை நாம் அறிந்திருக்கிறோமா?**

இந்த ஏழாவது மற்றும் கடைசி சபையின் காலப்பகுதியின் முடிவானது நம்முடைய நாட்களில் – இன்னும் சில வருடங்களே நிறைவேறயிருப்பதை காண்கிறோம்.

**இதன் மூலம், இந்த காலப்பகுதி – கி.பி. 1874 முதல் சபையின் நிறைவுவரை.**

இதுவே, "ஏழு சபைகளும்" சபை சரித்திரத்தில் காணப்படுகிற அவைகளின் காலப்பிரிவுகளுமாகும். இப்பொழுது, நாம் இந்த ஏழு காலப்பிரிவுகளில் சபையின் சரித்திரத்தில் நிறைவேறின சில சம்பவங்கள் மத்தேயு சுவிசேஷம் 13 –ஆம் அதிகாரத்தில் கர்த்தர் பேசின ஏழு உவமைகளில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை காணலாம்.

1

## மத்தேயு 13 : 1 – 8

**(விதைப்பவன் பற்றின உவமை)**

**"இயேசு அன்றையதினமே வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத்திலே உட்கார்ந்தார். திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் படவில் ஏறி உட்கார்ந்தார், ஜனங்களெல்லாரும் கரையில் நின்றார்கள். அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார், கேளுங்கள், விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது, பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது, மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ,**



**தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது, முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.”**

இந்த உவமை முதலாம் சபையின் காலப்பகுதியாகிய எபேசுவின்போது, இராஜ்யத்தின் சுவிசேஷத்தை “விதைக்க” அல்லது “போதிக்க கர்த்தருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் போதகர் மூலம் அனுப்பப்பட்டதை சித்தரிக்கிறது.



## மத்தேயு 28:19,20

**“ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்”**

## அப்போஸ்தலர் 1 : 8

**“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.”**

ஆம், இது உலகமுழுவதும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கான பிரயாணங்கள் ஏறெடுக்கப்பட்ட “சுவிசேஷ ஊழியத்திற்கான” சபையின் காலப்பிரிவாகும்.

மேலும், வசனத்தில் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம் இராஜ்யத்தின் சுவிசேஷமானது ("விதை") மாபெரும் சவால்களுக்கும், உபத்திரவங்களுக்கும் மத்தியில் "விதைக்கப்பட்டதை" வாசிக்கிறோம்.

**"சில விதை விழுந்தன..."**

என்பது மாம்ச காதுகளினால் கேட்டு "புரிந்துகொள்ளுதலின் காதுகள்" இல்லாததினால் தேவனுடைய வார்த்தைகளை புரிந்துகொள்ள தவறியவர்களைக் குறிக்கிறது.

**"சில விதைகள் கற்பாறையின் மேல் விழுந்து..."**

என்பது வசனத்தை "கேட்டவுடன்" மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற, அதேசமயம் உபத்திரவங்களையும், போராட்டங்களையும் சந்திக்க உறுதியான குணலட்சணங்களை பெற்றிராதவர்களைக் குறிக்கும்.

**"சில விதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்தது..."**

என்பது வசனத்தை "கேட்டு" மகிழ்ச்சியை "பிரதிபலித்தவர்களை" குறிக்கிறது, ஆனால், அவர்கள் இந்த உலகத்தின் கவலைகளினால் நிறைந்து சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாமல் போனவர்களைக் குறிக்கும்.

**"சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன..."**

என்பது வசனத்தை "கேட்டு" மகிழ்ச்சியை "பிரதிப்பலித்து" விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடினவர்களைக் குறிக்கும்.

ஆம், கர்த்தருடைய உண்மையான சீஷர்களை அடையாளம் காண அதிகம் விதைக்க வேண்டியதாயிருக்கிறது.

இப்பொழுது, இரண்டாம் உவமைக்கு கடந்து செல்வோம்.

## 2 மத்தேயு 13 : 24 - 30

**(கோதுமை மற்றும் களைகளைப் பற்றிய உவமை)**

**"வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார், பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது**



**வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து, ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா ? பின்னே அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன், சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர், நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா ? என்று கேட்டார்கள். அதற்கு அவன், வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி, முதலாவது, களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள், கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்."**

இந்த உவமை இரண்டாவது "சபையாகிய" சிமிர்னாவின் காலப்பகுதியைக் குறிக்கிறது. அதைக் குறித்து வாசிக்கையில்,

**"சத்துரு"**

எனப்பட்ட சாத்தான் "மகா பரிசுத்தமான விசுவாசம்" என்றழைக்கப்படும் வேதத்தில் உள்ள சத்தியங்களை கள்ள உபதேசங்களின் மூலம் சீர்க்குலைக்கத் துவங்கிய காலமாகும். அப்பொழுது, தேவனுடைய வார்த்தைகளில் உள்ள ஒவ்வொரு சத்தியத்திற்கும் பதிலாக அசத்தியம் ஏற்படுத்தப்பட்டது.

இது அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளில் நாம் காண்கிறபடி ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் படிப்படியாக நிறைவேறியது.

## 1 தீமோத்தேயு 4 : 1

**"ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்."**

ஆம், இந்த கள்ள உபதேசங்களுக்கும், "பிரபலமான சத்தியங்களாக" கருதப்பட்ட உபதேசங்களுக்குள்ளும் விசுவாசிகள் கொண்டுவரப்பட்டனர்.

இவர்கள் பெயரளவில் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட்டனர்.

இவர்களை இங்கு கோதுமை மணியை "போல்" காணப்படும் – "களைகள்" என்ற அடையாளத்தின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளன.

ஆம், சபையின் இந்த காலப்பகுதியில் வேதத்தில் எவ்வித ஆதாரமும் காணப்படாத அனைத்துவித உலகபிரகாரமான "சத்தியங்கள்" சபையின் விசுவாசத்திற்குள் புகுத்தப்பட்டது.

## மத்தேயு 13 : 31, 32

3

**(கடுகு விதை பற்றின உவமை)**

**"வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார் – பரலோகராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது, அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்.**



**அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.”**

இந்த உவமை மூன்றாவது “சபையின்” காலப்பகுதியாகிய பெர்கமுவில், மிக சிறிய அளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கிறிஸ்தவ சபை இயற்கைக்கு மாறான அசாதாரண வளர்ச்சி அடைந்ததை சித்தரிக்கிறது.

ஆம், பொதுவாக மிக சிறிதான கடுகு விதை அதிகபட்சமாக 3 – 4 அடி உயரத்தில் வரும் செடியை விளைவிக்கிற தோட்டபயிரானது ஒருபோதும் **மரமாக வளர்ச்சியடையாது.**

அதுபோலவே, **உண்மையான விதையாகிய** இராஜ்யத்தின் சுவிசேஷமும், அதன் **உபதேசங்கள்** மற்றும் **போதனைகளால்....** எண்ணிக்கையில் அநேகரான சீஷர்களை விசுவாசிகளை தன்னிடத்தில் ஒருபோதும் ஈர்க்காது.

**மத்தேயு 16 : 24**

**“அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி – ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.”**

**2 தீமோத்தேயு 2 : 11**

**“இந்த வார்த்தை உண்மையுள்ளது, என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்.”**

ஆம், இந்த சத்திய உபதேசங்களின் மூலம் கிறிஸ்தவ சபையானது அதிக அளவில் வளர்ச்சி பெறாது.

ஆனால், **கி.பி. 315 – 320**-க்கு இடைப்பட்ட வருடங்களில் கிறிஸ்தவ மதத்திற்கு ரோம சக்கரவர்த்தி கான்ஸ்டான்டைன் மதம் மாறினதை தொடர்ந்து, கிறிஸ்தவ மதம் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டது.

இதை தொடர்ந்து அநேக கிறிஸ்தவ கண்காணிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு

**நைஸ் ஆலோசனைக் கூட்டம்** ஆயத்தப்படுத்தப்பட்டது.

இங்கு, **மாபெறும் கள்ளபோதனையாகிய "திருத்துவம்"** ஏற்படுத்தப்படுவதற்கான முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆம், உண்மையில் இவ்விதமான உலகபிரகாரமான "சத்தியங்கள்" அநேகம் புகுத்தப்பட்டது.

சக்கரவர்த்தி ஒரு "கிறிஸ்தவனாக" மாறினதும், கிறிஸ்தவ மதம் ரோம சாம்ராஜ்யத்தின் பிரபலமான வழிபாட்டு முறையாக மாற காரணமானது.



ஆம், "......**அது வளரும்போது**......**மரமாகும் என்றார்**"

4

## மத்தேயு 13 : 33

**(புளித்த மாவைப் பற்றிய உவமை)**

**"வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; பரலோகராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கி வைத்தாள் என்றார்."**

இந்த உவமை **நான்காவது "சபையின்"** காலப்பகுதியாகிய

தீயத்தீராவில் **"ஸ்திரீ"** – ஆளுகையிலிருந்த **பெயர்சபையும்,** **"அந்திக்கிறிஸ்தாகிய" போப் மார்க்க** அமைப்பு வேதத்தை "புதைத்து வைத்து" – **"புளித்த மாவாகிய"** – கள்ள உபதேசங்கள், நம்பிக்கைகள், புறமதவழிபாட்டு போதனைகளை **சபையின் விசுவாசத்திற்குள் அறிமுகப்படுத்தியது.**

**இங்கு, "விதைத்த.....மனிதனை" பற்றிக் குறிப்பிடாமலிருப்பதை கவனிக்கவும்.**

ஆம், இது தேவனுடைய வார்த்தைகளில் காணப்பட்ட சத்தியங்கள் அவருடைய குமாரன் இயேசுவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களும், இந்த காலப்பகுதியில் முற்றிலும் காணாமல் போனதைக் குறிக்கிறது.

ஆம், **வேதம்** மற்றும் **அதைப் பற்றிய ஆராய்ச்சி** முற்றிலுமாக **புறக்கணிக்கப்பட்டு** – விசுவாச பிரமாணங்களின் – அடிப்படையில் உருவான விசுவாசம் புகுத்தப்பட்டது.

இதுபோன்று மூன்று முக்கியமான விசுவாச பிரமாணங்கள் இருந்தன. அவை –

**1.அப்போஸ்தலர் விசுவாச அறிக்கை ( 115 வார்த்தைகள் )**

**2.நீசின் விசுவாச அறிக்கை ( 230 வார்த்தைகள் )**

**3.அதேனேசியஸ் விசுவாச அறிக்கை ( 720 வார்த்தைகள் )**



இவ்விதமாக, வேதத்தை அடிப்படையாக கொண்ட போதனைகள் மற்றும் உபதேசங்களின் மீது இருக்கவேண்டிய கிறிஸ்தவ விசுவாசம் முற்றிலுமாக திசைதிருப்பப்பட்டு இந்த விசுவாச அறிக்கைகளின் மீது கவனம் செலுத்தப்பட்டது.



**ஆம், இதன்மூலம் சபையானது இருண்ட யுகத்திற்குள் பிரவேசித்தது.**

இவையனைத்தும், இந்த உவமையின் பின்வரும் வார்த்தையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது,

**"முழுவதும் புளிக்கும் வரைக்கும்"**

## 5 மத்தேயு 13 : 44

**( புதைந்திருந்த பொக்கிஷத்தை பற்றிய உவமை )**

**"அன்றியும் பரலோகராஜ்யம் நிலத்திலே புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்."**

இந்த உவமை ஐந்தாவது "சபையின்" காலப்பகுதியாகிய சர்தையைக் குறிக்கிறது. இது 1517-ஆம் வருடம் துவங்கிய சீர்த்திருத்தலுக்கு முந்தின காலப்பகுதியாகும்.

**இங்கு, "புதைக்கப்பட்ட பொக்கிஷம்" எதைக் குறிக்கிறது ?**



இது **தேவனுடைய வார்த்தையாகிய – வேதத்தைக்** குறிக்கிறது. வேதமானது புரிந்துகொள்ளமுடியாத பாஷைகளாகிய லத்தீன் மற்றும் கிரேக்க பாஷைகளில் இருந்த காரணத்தால், சாதாரண ஜனங்களுடைய பார்வையிலிருந்து மறைக்கப்பட்டு அல்லது **நீண்ட காலமாக "புதைக்கப்பட்டிருந்தது".**

ஆனால், அது பிரெஞ்சு மற்றும் ஆங்கில பாஷைகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டதின் மூலம் "வெளியாக்கப்பட்டது".

இவ்விதமாக, "பொக்கிஷம்" கண்டுபிடிக்கப்பட்டு வேதத்திலிருந்து மாபெரும் சத்தியங்கள் வெளிகொண்டுவரப்பட்டு, கள்ள உபதேசங்கள் மற்றும் தவறான போதனைகளின் மூலம் உருவான "இருளை" அகற்றும் சத்தியவெளிச்சம் பிரகாசித்தது.

ஆம், **இந்த "பொக்கிஷத்தையும்"** மாபெரும் சத்தியங்களையும் **கண்டுபிடித்த அநேகர்** "எல்லாவற்றையும்" அல்லது **தங்களுடைய அனைத்தையும்** தேவனுடைய வார்த்தைக்கு ஊழியம் செய்வதில் **அர்ப்பணித்தார்கள்.**

மேலும், இந்த மாபெரும் சத்தியங்களை சாதாரண ஜனங்களுக்கு கொண்டு செல்ல மிகப் பெரிய பிரயாசம் ஏறெடுக்கப்பட்டது.

## 6 மத்தேயு 13 : 45

**( விலை உயர்ந்த முத்து பற்றின உவமை )**

**"மேலும் பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது."**



இந்த உவமை ஆறாவது “சபையின்” காலப்பகுதியாகிய பிலதெல்பியாவைக் குறிக்கிறது. இது கிபி 1517, அக்டோபர் 31-ஆம் தேதி துவங்கிய சீர்த்திருத்தலுக்கு பின்பு வந்த காலப்பகுதியாகும்.

**இங்கு, குறிப்பிடப்பட்டிருக்கும் “முத்து வியாபாரி” மற்றும் “நல்ல முத்துக்கள்” என்பது எதைக் குறிக்கிறது ?**


இந்த முத்துக்களை பற்றின விளக்கத்தை பின்வரும் வசனத்தில் நாம் காண்கிறோம்.

**மத்தேயு 7 : 6**

**“பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள் உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள், போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.”**



ஆம், முத்துக்கள் என்பது **“பரிசுத்தமானதைக் குறிக்கிறது”.**



**இந்த “முத்துக்கள்” தேவனுடைய வார்த்தைகளாகும்.**

இதைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**சங்கீதம் 12 : 6**

**“கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்தசொற்களாயிருக்கிறது.”**

ஆம், இங்கு “முத்துக்கள்” என்பது வேதத்தில் காணப்படுகிற தேவனுடைய பரிசுத்தமான சத்திய வார்த்தைகளாகும்.

இதன்மூலம், “நல்ல முத்துக்களை தேடுவது” என்பது வேத ஆராய்ச்சியின் மூலம் சத்தியத்திற்கான தேடலைக் குறிக்கிறது.



சீர்த்திருத்தலின் போது துவங்கிய இந்த சபையின் காலப்பகுதியில் இருந்ததாகக் குறிப்பிடப்படும் அந்த **"முத்து வியாபாரி" "சீர்த்திருத்துதலின் தந்தை"** என்று அழைக்கப்படும் – **மார்ட்டீன் லூதரைக் குறிக்கும்.**



**இங்கு, அவர் கண்டுபிடித்த அந்த "ஒரு விலையேறப்பெற்ற முத்து" எதைக் குறிக்கிறது ?**

அது பின்வரும் வசனத்தில் காணப்படுகிற மாபெரும் சத்தியமாகும்

**ரோமர் 1 : 17**

**"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது."**

**ஆம், இது அன்று ஒரு மாபெரும் சத்தியமாக உணரப்பட்டதாகும்.**



அதுவரை **பாவத்திற்கான மன்னிப்பு** என்பது **பதக்கங்கள், பாவமன்னிப்பு சீட்டு, பரிசுத்த எண்ணை, தீர்த்தம்** என இது போன்றவைகளை விலைகொடுத்து வாங்குவதன் மூலம் தரப்பட்டது.

ஆம், பாவ மன்னிப்பிற்கு "அடையாளம்" என்றும், தேவன் அங்கீகரிக்கின்ற தெய்வீகமான பொருட்கள் என்றும் விற்கப்பட்ட இவைகளை மார்ட்டீன் லூதர் கண்டபொழுது மிகவும் கலங்கி இவை சத்தியமல்லாததை உணர்ந்தார்.



மார்ட்டீன் லூதருக்கு பின்பு அவரை போன்று **ஜான் வெஸ்லி, ஜான் நாக்ஸ், ஜான் ஹஸ்** போன்றவர்கள் தோன்றினார்கள்.

மேலும், இந்த கால பகுதியில் அநேகர் தங்களுக்குரிய **"எல்லாவற்றையும் விற்று" தங்களுடைய ஜீவனை முழுமையாக அர்ப்பணித்து** தேவனுடைய சத்தியத்திற்கு ஊழியம் செய்ய முன்வந்தனர்.

மேலும், இந்த காலப்பகுதியில் **வேதமானது ஜெர்மானிய மொழியில்** மார்ட்டீன் லூதர் மூலம் **மொழிபெயர்க்கப்பட்டது.**

பின்நாளில், **THE KING JAMES VERSION (KJV) கி.பி. 1611-** ஆம் வருடம் அச்சடிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து 1799-ஆம் வருடம் போப் மார்க்கம் விழுந்ததற்கு பின்பு 1803-ஆம் வருடத்தில் அநேக இடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட வேதாகம சங்கங்களின் மூலம் வேதம் முறையாக அச்சிடப்பட துவங்கியது.

இப்பொழுது நாம் ஏழாவது உவமைக்கு கடந்து செல்வோம்,

## 7 மத்தேயு 13 : 47,48

**( மீன் வலையை பற்றின உவமை )**

**"அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள்."**



இந்த உவமை ஏழாம் "சபையின்" காலப்பகுதியாகிய **லவோதேக்கியாவைக்** குறிக்கிறது.



மேலும், இந்த காலப்பகுதியின் பிரதான வேலையாகிய,

**"கோதுமை"** மற்றும் **"களைகள்"** பிரிக்கப்படும் அறுவடையை இங்கு **"நல்ல மீன்கள்"** மற்றும் **"ஆகாத மீன்கள்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் **கர்த்தர் தாமே பிரதான அறுவடையாளனாக** – அவருடைய முதலாம் வருகையில் யூத யுக அறுவடையில் இருந்ததுபோல் இங்கும் இருக்கிறார்.

அவர் அவருடைய சபையை பிரித்து நியாயந்தீர்ப்பதை வாசிக்கிறோம் –

**லூக்கா 19 : 15**

**"அவன் ராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பிவந்த போது தன்னிடத்தில் திரவியம் வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில் அவனவன் வியாபாரம்பண்ணிச் சம்பாதித்தது இவ்வளவென்று அறியும்படி, அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரச் சொன்னான்."**

ஆம், இங்கு தனிப்பட்ட முறையில் "அவனவன்" (சபையின் அங்கத்தினர்) பிரிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்படுவதை உவமை பாணியில் காண்பிக்கப்பட்டுள்ளது.



நாம் தற்போது இந்த அறுவடை காலத்தின் முடிவில் – அதாவது "கோதுமை மணிகள்" களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டு நிறைவேறுகிற காலப்பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

**ஆம், 1874 –ஆம் வருடம் துவங்கிய அறுவடை வெகு சீக்கிரத்தில் நிறைவடைய காத்திருக்கிறது.**

**இந்த "ஏழு சபைகளின்" சரித்திரத்தை அறிந்துகொண்ட நாம் இப்பொழுது, அவர் வலது கையில் காணப்பட்ட..."ஏழு நட்சத்திரங்களை" – வெளிப்படுத்தல் 1 : 16 குறித்து காண்போம்.**

இவைகள் குறித்து பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம்,

**வெளிப்படுத்தல் 1 : 20**

**"...அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்..."**

ஆம், இங்கு **"தூதர்கள்"** என்ற வார்த்தை
**"எஜீலோஸ்" - aggelos (கிரேக்க எண் – 32)**
என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது.

இதற்கு **"தூது செல்பவர்"** அல்லது **"மேய்ப்பன்"** என்று பொருளாகும். இதன்மூலம், இந்த **"ஏழு தூதர்களும்"** சபையின் ஏழு **கட்டங்களாகிய "காலப்பகுதிகளில்" கர்த்தர் பயன்படுத்திய**

**விசேஷமான ஏழு தூதர்கள் ஆவர்.**

இவர்கள் ஆவிக்குரிய ஜீவிகளாயிராமல், மாம்சத்திலிருந்தவர்களும், "ஏழு சபையின்" ஒவ்வொரு காலப்பகுதியிலும், ஒரு விசேஷமான சத்தியத்தை வெளிப்படுத்த கர்த்தர் தேர்ந்தெடுத்த விசேஷமான சகோதரர்களாகவும் இருக்கிறார்கள்.

**இங்கு அந்த தூதர்கள் "அவருடைய வலது கரத்தில்" (வெளிப்படுத்தல் 1:16) இருப்பது எதைக் குறிக்கிறது ?**


இது அந்த ஏழு தூதர்களும், கர்த்தரால் விசேஷமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரங்கள் என்றும் ....மேலும், அவர்கள் கர்த்தருடைய கண்காணிப்பிலும், பாதுகாப்பான வழிநடத்துதலிலும் இருப்பதை அடையாளப்படுத்துகிறது.

இப்பொழுது இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் வாழ்ந்துகொண்டிருக்கிற நாம் இந்த “ஏழு தூதர்கள் (அ) ஏழு நட்சத்திரங்களும்” யார் என்பதை அடையாளம் காண முயற்சிக்கலாம்.

## 1. எபேசு (33 கிபி – 70 கிபி)

**தம்முடைய முதலாவது (ஆதிகால) சபையில் சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கு கர்த்தர் அதிகமாக பயன்படுத்திய பாத்திரம் யார் ?** என்று பார்க்கும்பொழுது,

இதற்கான பதிலை புதிய ஏற்பாட்டை கவனிப்பதிலேயே நாம் பெறமுடிகிறது.



பவுல்

ஆம், அது “கடைசி” அப்போஸ்தலனாகிய – **பவுல்** அப்போஸ்தலனே ஆவார்.

எழுதியவர் அறியப்படாத, எபிரெயர் புத்தகத்தையும் சேர்த்து **14 நிருபங்களை** அவர் எழுதியுள்ளார்.

அவருடைய நிருபங்கள் புதிய ஏற்பாட்டில் 1/3 பங்கை உள்ளடக்கியுள்ளது.

இதை எழுதியவர் யார் என்றே தெரியாத எபிரெயருக்கு எழுதின நிருபம் கூட பவுல் அப்போஸ்தலன் எழுதியதாகவே கருதப்படுகிறது.

இதற்கான காரணங்கள் இரண்டு. அவை

1.அது எழுதப்பட்டுள்ள பாணி பவுலுடைய பாணியை ஒத்திருப்பது.

2. தன்னுடைய சொந்த ஜனமாகிய எபிரெயரிடத்தில் அந்த அப்போஸ்தலனின் விஷேசித்த அன்பு. **(ரோமர் 11 : 13)**

**“என் இனத்தாருக்குள்ளே நான் வைராக்கியத்தை எழுப்பி...”**

விழுந்துபோன யூதாஸ்காரியோத்தின் இடத்தை நிரப்புவதற்காக இயேசு தாமே தெரிந்துகொண்ட கடைசி அப்போஸ்தலனாக இவர் இருப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்,

## அப்போஸ்தலர் 9 : 15

**"அதற்கு கர்த்தர், நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்."**

ஆம், சபையை துன்புறுத்த தமஸ்கூவை நோக்கி பயணித்த தர்சு பட்டணத்தானாகிய சவுலை கர்த்தர் தேர்ந்தெடுத்தார்.



ஆனால், இன்று கடைசி அப்போஸ்தலனாக கர்த்தர் அவரை தேர்ந்தெடுத்தது விவாதத்திற்குரிய ஒன்றாக இல்லாமல் இருந்தாலும், ஆதிகால சபையில் அது ஒரு விவாதத்திற்குரிய விஷயமாக இருந்ததை வாசிக்கிறோம்,



## 1 கொரிந்தியர் 9 : 1, 2

**"நான் அப்போஸ்தலனல்லவா ? நான் சுயாதீனனல்லவா ? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா ? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா ? நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனாயிராவிட்டாலும், உங்களுக்கல்லவோ அப்போஸ்தலனாயிருக்கிறேன். கர்த்தருக்குள் நீங்கள் என்**

**அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களே."**

ஆம், ஆதிகால சபையில் பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாத அநேக கிறிஸ்தவர்கள் இருந்தனர். இதைக் குறித்து அவர் பின்வரும் வசனத்தில் தெளிவுப்படுத்துகிறார்.

**கலாத்தியர் 1 : 1**

**"மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும் அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்...."**

இங்கு பவுல் அப்போஸ்தலனாக தன்னை குறித்து தெளிவுபடுத்தும் விதத்தை நாம் கவனிக்கவேண்டும், அதை அவர் பின்வருமாறு உணர்த்துகிறார்.

**"ஒரு மனிதனாலும் அல்ல"** - இது அவர் மற்ற பதினோரு அப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கப்படாததை குறிக்கிறது.

**"மனிதர் மூலமாகவும் அல்ல"** - இது மனிதர்கள் தேர்ந்தெடுக்கும் முறையாகிய சீட்டுபோடுதலின் மூலமாக அவர் தேர்ந்தெடுக்கப்படாததைக் குறிக்கிறது.



**"இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும்"** - இங்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரத்தை இது குறிக்கிறது.

மேலும், அப்போஸ்தலனாகிய புவுல் ஒரு பரிசேயனாக யூத நியாயசாஸ்திரியாகிய கமாலியேலின் கீழ் பயின்றதை கீழே வாசிக்கிறோம்

**"நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே**

**வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு...”** - **அப்போஸ்தலர் 22 : 3**

ஆனால், ஒரு கிறிஸ்தவனாக அவர் மாறினபின்பு, கர்த்தராகிய இயேசுவின் மூலம் சத்தியம் போதிக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டது ஒரு மிகப்பெரிய விஷயமாக இருப்பதை நாம் கீழே கவனிக்கிறோம்.

**கலாத்தியர் 1 : 11, 12**

**“மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்ல வென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன், நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.”**



ஆம், இது அவர் பெற்ற ஓர் விசேஷ சான்றிதழாகும்.

மேலும், அப்போஸ்தலனாகிய பவுல், யூதர்களுக்காகப் பேதுரு நியமிக்கப்பட்டது போல, இவர் புறஜாதிகளுக்கான விசேஷ அப்போஸ்தலனாக இருக்கிறார்.

இவருடைய வாழ்க்கை கிபி 67-ஆம் ஆண்டில், ரோமாபுரியில் தலை துண்டிக்கப்பட்டு முடிவுக்கு வந்தது.

இவர் கடைசியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலனாக இருந்தாலும், அவர்கள் எல்லாரிலும் இன்று பெரியவராக இவரே இருக்கிறார்.

## 2. சிமிர்னா (கி.பி. 70 – கி.பி. 313)

சபையின் இந்த இரண்டாவது காலப்பகுதியை பார்க்கையில், அப்பொழுது சத்திய “வெளிச்சத்தை” கொண்டுவர கர்த்தர் பயன்படுத்திய “தூதன்” யார் என்று அடையாளம் காணுகையில் அது அப்போஸ்தலர்களில் ஒருவரும், இயேசுவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் இளையவரும், வேதத்தில் ஐந்து புத்தகங்களை கி.பி. 90-96 இடைப்பட்ட வருடங்களில் எழுதியவருமாவார்.

**ஆம், அது “அன்பான” அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் – யோவான் ஆவார்.**



இவருடைய வைராக்கியம் மற்றும் உற்சாகத்தினால் இவர் கர்த்தரால் விசேஷமாக நேசிக்கப்பட்டதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**யோவான் 21 : 20**

**“பேதுரு திரும்பிப்பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம்பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து, ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான்.”**

ஆம், இங்கு இயேசுவின் அன்பான அப்போஸ்தலனாக இருப்பதை யோவான் தானே குறிப்பிடுவதை காண்கிறோம். மேலும், மாம்சமாக பூமியில் வருவதற்கு முன்பு கர்த்தர் இருந்த நிலையைக் குறித்தும்.....

“ஆதிமுதல்” பரலோகபிதாவிடம் அவருக்கிருந்த உறவையும், வெளிப்படுத்துவதற்கு அப்போஸ்தலனாகிய யோவான் பெரிதும் பயன்படுத்தப்பட்டார்.

இவர், தெய்வீக குணலட்சணமாகிய அன்பைக் குறித்து அதிகமாக போதித்திருப்பதால், **“அன்பின் அப்போஸ்தலன்”** என்றழைக்கப்படுகிறார்.

இவர் நடக்கமுடியாத அளவு முதியவரானபோது, கூட்டத்தில் கலந்துகொள்ளும் சகோதரர்களுக்கு அவருடைய உற்சாக வார்த்தைகளை எடுத்து செல்ல, அவரை அவருடைய சீஷர்கள் பல்லக்கில் சுமந்து செல்லவேண்டி இருந்ததாக சரித்திரம் கூறுகிறது. அவ்வாறு செல்கையில், அவர் சொன்னது

**“ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள், ஏனெனில் ஆண்டவர் இதையே நமக்கு போதித்தார்...... ஆம், ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள் - அது போதுமானதாயிருக்கிறது.**



மேலும், ஒருமுறை இவரை கொதிக்கும் எண்ணை கொப்பரையில் போட்டபோதிலும், காயப்படாதவராக வெளியே வந்ததாக சரித்திரம் கூறுகிறது.

மேலும், இவர் சில வருடங்கள் **பத்மூ தீவில்** சிறையிலடைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது அவர் **வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார்.**

அப்போஸ்தலனாகிய யோவான், அப்போஸ்தலர்களில் கடைசியாக மரித்தவரும், மரிக்கும்பொழுது கிட்டத்தட்ட 100 வயதை நெருங்கிய முதியவராக இருந்து –

**பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் இரத்தசாட்சியாக மரிக்காமல், இயற்கை மரணத்தை சந்தித்த ஒரே அப்போஸ்தலனாகவும் இருக்கிறார்.**

## 3. பெர்கமு (கி.பி. 313 – கி.பி. 1157)

சபையின் இந்த மூன்றாம் காலப்பகுதிக்கு வருகிற நாம், இந்த காலப்பகுதி **“சத்துருவாகிய”** சாத்தான் தன்னுடைய **கள்ளபோதனை** மற்றும் **தவறுகளாகிய விதையை விதைத்த காலமாயிருப்பதை** காண்கிறோம்.

**இந்த காலப்பகுதியில் சத்திய “வெளிச்சத்தை” பிரகாசிக்கச் செய்ய கர்த்தர் தேர்ந்தெடுத்து பயன்படுத்திய “தூதன்” அல்லது “நட்சத்திரம்” யார் ?**

இவர் கான்ஸ்டான்டின் சக்கரவர்த்தி கிபி 325-ஆம் வருடம், நைஸ் பட்டணத்தில்,

**யோவான் 10 : 30 - “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்...”**

என்ற வசனத்தை அடிப்படையாக கொண்டு இயேசுவிற்கும் பிதாவிற்கும் இடையில் உள்ள உறவைக் குறித்து விவாதிக்க ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்தகொண்ட ஒருவர் ஆவார்.



ஆம், அந்த விவாதம் ஏரியஸ் மற்றும் அத்தேநேஷியஸ் என்பவர்களுக்கிடையில் நடந்தது. ஒருவர் வயதில் முதியவராகவும் மற்றவர் இளையவராகவும் இருந்தனர்.

இவர்களில் வயதில் முதியவரான **ஏரியஸ், சத்திய "வெளிச்சத்தை" பிரதிபலித்தார்**; அதே சமயம் இளையவரான **அத்தேநேஷியஸ் இயேசுவும் பிதாவும் "ஒரே நபராக"** இருக்கும் **நிலையை ஆதரித்தவராவார்.**

இதுவே பின்நாளில் தேவதூஷணமும், கள்ள உபதேசமுமான "திரித்துவ" போதனையாக வளர்ச்சியடைய காரணமாக அமைந்தது.

ஏரியஸின் விவாதம் என்னவெனில்


**"பிதா என்பவர் பிதா ஆவார், குமாரன் என்பவர் குமாரன் ஆவார், அப்படியானால், பிதா என்பவர் குமாரனுக்கு முன்பாக இருந்திருக்கவேண்டும்,**

**அப்படியானால், ஒருக்காலத்தில் குமாரன் என்பவர் இல்லாதிருந்திருக்க வேண்டும்,**

**அப்படியானால், ஒரு காலத்தில் இல்லாதிருந்த அனைத்து சிருஷ்டிகளும் உண்டாக்கப்பட்டதுபோல, இவரும் உண்டாக்கப்பட்டவர் ஆவார்.**

ஆம், இயேசு பிதாவினால் சிருஷ்டிக்கப்பட்ட குமாரன் என்ற சத்தியத்தை இவர் தெளிவாக போதித்தார்.

**ஆம், இந்த ஏரியஸ் சபையின் மூன்றாவது காலப்பகுதியாகிய பெர்கமுவின் "தூதன்" ஆவார்.**



இவர் ஆப்ரிக்காவில் உள்ள விபியா தேசத்து ஆசிரியரும், வட எகிப்திலுள்ள அலக்சான்டிரியா பட்டணத்து சபையின் மூப்பருமாவார். இது ஆதிகாலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஐந்து சபைகளில் ஒன்றாகும். இவர் சுபாவத்தில் எளிமையும், தாழ்மையுள்ளமும் கொண்டவர்.

**அப்போது நடந்த அந்த மாபெரும் விவாதத்தில் அத்தேநேஷியஸின் வாதம் பிரபலமாக ஏற்று கொள்ளப்பட்டு, ஏரியஸ் காட்டுமிராண்டிகள் வாழும் தீவுக்கு கடத்தப்பட்டார்.**

சில நாட்கள் கழித்து அவரை தேடி காட்டுமிராண்டிகளின் தீவுக்கு சென்ற சிலர், அவரை உயிருடன் கண்டு ஆச்சரியப்பட்டனர். மேலும், அவர் காட்டுமிராண்டிகளில் சிலரை கிறிஸ்துவ விசுவாசத்திற்குள் கொண்டு வந்திருந்தார்.

ஆம், **வட ஆப்ரிக்காவில் ஏரியஸ் பிரபலமானவராக** இருந்தார். அவரை பின்பற்றினவர்கள் **"ஏரியன்ஸ்"** என்று அழைக்கப்பட்டார்கள்.

அவருடைய போதனைகள் **“ஏரியனிசம்”** என்று அழைக்கப்பட்டது. ஏழாவது நூற்றாண்டில் இஸ்லாம் மதம் தோன்றும்வரை வட ஆப்ரிக்கா மற்றும் எகிப்தில் ஏரியனிசத்தின் விசுவாசிகள் அநேகர் இருந்தனர்.

இன்றும் “பிரபலமான” பெயர் கிறிஸ்தவ மண்டலம் ஏரியஸை ஒரு “வேத புரட்டர்” என்றும், அத்தேநேஷியஸை ஒரு “பரிசுத்தவான்” என்றும் கருதுகிறது.

ஏரியஸ் **கி.பி. 336**-ஆம் வருடம் **கான்ஸ்டான்டிநோபிளில்,** “விநோதமான” சூழ்நிலைகளின் மத்தியில் **அகாலமரணம் அடைந்தார்.** அவருடைய மரணத்தில் களிகூர்ந்த விரோதிகளால் விஷம் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆம் நம்முடைய கர்த்தரும் கூட ஏரியஸை குறித்து **வெளிப்படுத்தல் 2:13**-ல் பின்வருமாறு குறிப்பிடுகிறார்

**“எனக்கு உண்மையுள்ள சாட்சி”**

## 4. தியத்தீரா (கி.பி. 1157 - கி.பி. 1367)

சபையின் இந்த நான்காவது காலப்பகுதியானது “அந்திக்கிறிஸ்து” அமைப்பாகிய போப் மார்க்கம் முழு அதிகாரத்துடன் ஸ்தாபிக்கப்பட்டிருந்த காலமாகும்.



இந்த காலப்பகுதியில் சத்திய “வெளிச்சத்தை” பிரகாசிக்கசெய்ய கர்த்தர் தேர்ந்தெடுத்த “தூதன்” – போப் மார்க்கத்தின் முக்கிய அனுதாபியான, பிரெஞ்சு தேசத்திலிருந்து வந்தார்.

**அவருடைய பெயர் பீட்டர் வால்டோ.**

இவர் தென் பிரான்சில் உள்ள லையான்ஸ் பட்டணத்து பணக்கார வியாபாரி.

லையான்ஸ் பட்டணத்தின் பிரதான பிரஜைகளுக்கு மத்தியில் பல்வேறு காரியங்களைக் குறித்து, 1157 –ஆம் வருடம் நடந்த கலந்துரையாடலின் போது,

**அவர்களில் ஒருவர் திடீரென.....தரையில் விழுந்து மரிக்க நேர்ந்தது.**

இந்த சம்பவம் அந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தவர்களில் ஒருவரை மிகவும் அதிர்ச்சியடைய செய்து, மனிதன் மீது விழுந்த மரண சாபத்தையும், மனிதனின் பரிதபிக்கப்பட்ட நிலையையும் நினைவுப்படுத்தியது.....அவர் பீட்டர் வால்டோ.

இவர் ஒரு பணக்கார வியாபாரியாக இருந்து, தன்னுடைய வாழ்க்கையை மாற்றி அமைக்கவும் மனந்திரும்பவும் சிந்திக்க துவங்கினார்.

தெய்வீக குணலட்சணத்தை அடைய முயற்சித்து ஏழை எளியவர்களுக்கு உதவிகள் செய்ய துவங்கினார். மேலும், வைராக்கியத்துடன் வேத வசனங்களை கற்றுக்கொண்டு போதிக்கவும் துவங்கினார்.

அதுமாத்திரம் அல்ல, அவர் **ஸ்டேப்பன்னாஸ் டி எவிசா** என்ற பெயர் கொண்ட கத்தோலிக்க பாதிரியாரை நியமித்து, வேதம் முழுவதையும் **லத்தீன் மொழியிலிருந்து பிரெஞ்சு மொழிக்கு** மொழிபெயர்க்கும் முயற்சியை மேற்கொண்டார்.

அப்பொழுது, ரோம கத்தோலிக்க நம்பிக்கைகளுக்கும், இயேசு கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் உபதேசத்திற்கும் இடையில் காணப்பட்ட மிக பெரிய வித்தியாசத்தை கவனித்தார்.

இவருடைய உபதேசங்களை கேட்டு அவரை பின்பற்றினவர்கள்-

**“வால்டேன்ஸ்”**

என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் ரோம கத்தோலிக்க சபையின் போதனைகள் மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, ஜனங்கள் வேத வசனங்கள் போதிப்பவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று போதித்தனர்.

போப் மார்க்கத்தின் கள்ளபோதனைகளுக்கு விரோதமாக எழும்பின மார்ட்டின் லூதருக்கு முன்பாக இவர்களே முதலில் தோன்றிய சீர்த்திருத்தவாதிகள்.


இவர்களுடைய சத்திய போதனைகள், எளிமையான, பரிசுத்தமான வாழ்க்கையை வெளிப்படுத்தி அதன் மூலம் போப் மார்க்க அந்தகாரத்தின் மத்தியில் பிரகாசித்த வெளிச்சமாயிருந்தது. படிப்படியாக இந்த "வால்டேன்ஸ்" என்பவர்களுக்கு விரோதமாக வளர்ந்த உபத்திரவங்கள் இவர்கள் லையான்ஸை விட்டு வெளியேறி பைன் காடுகளிலும், குகைகளிலும் தஞ்சம்புக காரணமானது.

**இதன் மூலம் ஐரோப்பா முழுவதும் இவர்கள் சத்தியத்தை எடுத்து சென்றனர்.**

ஆம், சரித்திரத்தில் பதிவாகாமல் இருந்தாலும், உண்மையில் சீர்த்திருத்தலுக்கு வெகு முன்னமே இந்த வால்டேன்ஸ் வேதவசனங்களிலிருந்து மாபெரும் சத்தியங்களை பெற்று அவைகளை பரப்பினவர்களாக இருந்தனர். கடைசியாக, பீட்டர் வால்டோ போமியா என்ற இடத்தில் குடியேறி, அங்கு 1179-ஆம் வருடம் மரித்தார்.

## 5. சர்தை (கி.பி. 1367 - கி.பி. 1517)

முந்தைய காலப்பகுதியாக இருக்கிற சபையின் இந்த ஐந்தாம் காலப்பகுதியில், கர்த்தர் தேர்ந்தெடுத்த தம்முடைய "தூதன்" அல்லது "நட்சத்திரம்" இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலிருந்த ஒரு ஆசிரியர்.



**அவர் பெயர் ஜான் வைக்லிப்.**

இவர் நெஞ்சுரமிக்க சீர்த்திருத்தவாதியும், முதன்முதலில் வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, வேதத்தின் சத்தியங்களை முறையாக உபதேசிக்க துவங்கியவருமாவார்.

இவருடைய பின்னடியார்களை **"லல்லார்ட்ஸ்" (LOLLARDS)**

என்று அழைக்கின்றனர். இது **"lollen"** அல்லது **"lullen"** என்ற ஜெர்மானிய வார்த்தையிலிருந்து வருகிறது. இதற்கு "மென்மையாகப் பாடுவது" என்று பொருளாகும். ஆம், இந்த வார்த்தையிலிருந்தே – தாலாட்டு பாடல் – என்று பொருள்படுகிற **"lullaby"** என்ற ஆங்கில வார்த்தை வருகிறது.

வைக்லிபின் பின்னடியார்கள் இவ்விதமாக அழைக்கப்படுவதின் காரணம், அவர்கள் தொடர்ச்சியாக பாமாலைகளை பாடிவருவதேயாகும். உண்மையில், இவர்களுடைய வருகையை சற்று தொலைவிலிருந்தே இந்த பாடல்களின் மூலம் உணரலாம்.



ஜான் வைக்லிப் "ஏழை பாதிரியார்கள்" என்ற வகுப்பாரை பயன்படுத்தினார். இவர்கள் தங்களுடைய கைகளில் தடியைப் பிடித்தவர்களாக, சுவிசேஷ நற்செய்தியை பரப்பினார்கள்.

**இந்த "ஏழை பாதிரியார்களுக்கு" இவரே ஊதியமளித்து வந்தார்.**

சபை சரித்திரத்தின் இந்த காலப்பகுதியில், சாதாரண ஜனங்கள் புரிந்துகொள்ளமுடியாத **லத்தீன் மொழியில், "புதைக்கப்பட்ட" நிலையிலிருந்த "பொக்கிஷமாகிய" – பரிசுத்தமான வேதவசனங்களை இவர் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து** சாதாரண ஜனங்களுடைய கைகளில் கிடைக்கும்படி செய்தார்.

ஜான் வைக்லிபைக் குறித்து காண்கையில், அவர்- **நுண்ணறிவு மிக்கவராக.... தெளிவான சிந்தையை உடைய.... சத்தியத்தை**

**நிலைநாட்டுவதில் உறுதியுடைய... சத்தியத்தை பாதுகாப்பதில் நெஞ்சுரமிக்கவராக** இருந்தார்.

அவருடைய நாட்களில் அவருக்கு இணையானவர் இல்லாத மாபெரும் சீர்த்திருத்தவாதியாக இருந்தார். இதினிமித்தம், இவரை –

**“சீர்திருத்தலின் விடிவெள்ளி” என்று அழைக்கின்றனர்.**

ஆம், உண்மையில் அந்த மாபெரும் சீர்த்திருத்தலுக்கு ஜான் வைக்லிபே அடிக்கல் நாட்டினார்.

இவர் மரித்த நாற்பது வருடங்கள் கழித்து, போப் மார்க்கமானது அவருடைய கல்லறையை தோண்டி எடுத்து, எஞ்சியிருந்த எலும்புகளை பொது மக்களின் பார்வையில் எரிக்கும் அளவிற்கு போப் மார்க்கம் இவரை வெறுத்தது, பின்பு, அவருடைய சாம்பலை எடுத்து அருகிலிருந்த ஆற்றில் கரைத்தனர்.

இதைக் குறித்து ஓர்ட்ஸ்வொர்த் என்ற கவிஞன் பின்வரும் கருத்தை எழுதுவதை காண்கிறோம் – அதாவது, ஆற்றில் கறைக்கப்பட்ட சாம்பல் கடலில் கலந்தது போல, ஜான் வைக்லிபின் போதனைகள் அவருடைய மரணத்திற்கு பின்பு உலகத்தில் கரைந்து அனைவரையும் சென்றடைந்தது என்று கூறுகிறார்.

ஜான் வைக்லிப் மேற்கொண்ட வேதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு, பின்நாளில் அவரை பின்பற்றிய -

**வில்லியம் டின்டல்**

என்பவரால் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்தது.

## 6. பிலதெல்பியா (கி.பி. 1517 – கி.பி. 1874)

சபையின் ஆறாவது காலப்பகுதி மாபெரும் சீர்த்திருத்தலில் துவங்கியது.

இக்காலப்பகுதிக்கான சத்திய வெளிச்சத்தை பிரகாசிக்கசெய்ய கர்த்தர் தேர்ந்தெடுத்து பயன்படுத்தின “தூதன்” அல்லது நட்சத்திரம், 1517-ஆம் வருடம் அக்டோபர் 31-ஆம் தேதி,

ஜெர்மனியின் விட்டன்பெர்க்கில் துவங்கிய சீர்த்திருத்தலுக்கு "வழிவகுத்தவர்" ஆவார்.

**ஆம், அவருடைய பெயர் மார்ட்டின் லூதர்.**



இவர் ஜெர்மனியில் இருந்த சேக்சோனியைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்க பாதிரியாராவார்.

இவர் தன்னுடைய பாவங்களுக்காக தன்னை சுயமாக வருத்திக்கொண்டு, அனைத்து விதமான உபவாசங்களையும் கடைபிடித்தார்.

இவர் 1508-ஆம் வருடம் விட்டன்பெர்க்கு பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக பணியில் சேர்ந்தார் – அப்பணியில் 1546-ஆம் வருடம் அவருடைய மரணம் வரை நிலைத்திருந்தார்.



பின்பு இவர் 1511-ஆம் வருடம் தன்னுடைய பாவங்களுக்கான மன்னிப்பை பெற ரோமாபுரிக்கு யாத்திரையாக சென்றார்.

அங்கு "**ஸ்காலா சான்டா**" என்றழைக்கப்படும் படிக்கட்டுகளில் முழங்கால்களால் ஏறிக்கொண்டிருக்கும் பொழுது, இவருடைய வாழ்க்கையை மாற்றி, மாபெரும் சீர்த்திருத்தலுக்கு வித்திட்ட அந்த வசனம் அவருடைய நினைவிற்கு வந்தது. ஆம், அவ்வசனத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**ரோமர் 1 : 17**

**"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது."**

ஆம், இந்த வசனம் நினைவுக்கு வந்தவுடன் படிக்கட்டுகளிலிருந்து இறங்கி அவர் ரோமாபுரியை விட்டு ஜெர்மனிக்கு திரும்பினார்.

அதற்கு பின்பு சில வருடங்கள் கழித்து

**"தொண்ணூற்று ஐந்து கேள்விகள்"**



என்றழைக்கப்பட்டதை விட்டன்பெர்க்கு தேவாலயத்தின் கதவுகளில் ஆணியடித்தார்.

இந்த "கேள்விகள்" அனைத்தும் – **பணத்தின் மூலம் பாவமன்னிப்பை பெற்றுகொள்ளலாம்** என்ற நம்பிக்கை மற்றும் ....**ஜான் டெட்செல் விற்ற பாவமன்னிப்பு சீட்டிற்கு** எதிராகவும் கேள்விகளை எழுப்பி விவாதித்தது.

இதற்கு பின்பு, படிப்பறிவு உள்ளவர்களுக்கு லத்தீன் மொழியிலும்....பொது ஜனங்களுக்கு ஜெர்மானிய மொழியிலுமான கைப்பிரதிகள் ஒன்றையொன்று தொடர்ந்தன. 1520-ஆம் வருடம் வாக்கில் மார்ட்டின் லூத்தர் ஜெர்மனியில் மிக பிரபலமானவராக

அதே வருடம் போப் தன்னுடைய அதிகாரத்தில் ஏற்படுத்தப்பட்ட **"புல்" (BULL)** என்ற கடிதத்தின் மூலம் லூதரை தடைசெய்து, அவரை வேதபுரட்டராக கருதி, மரணத்திற்கு ஏதுவாக பயமுறுத்தினார்கள்.

**ஆனால், 1520 டிசம்பர் 10-ஆம் தேதி, "போப்பினுடைய அந்த கடிதத்தை" பொதுமக்களின் முன்னிலையில் சுட்டெரித்தார்.**

ஆம், இதற்கு பின்பு போப் மார்க்கத்திற்கு எதிராகவும், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் போதகத்திற்கு எதிராகவும் புரோட்டஸ்டன்ட் இயக்கம் துவங்கியது.

இதற்கு பின்பு, துறவியாக இருந்த மார்ட்டின் லூதர் ஒரு காலத்தில் கன்னியாஸ்திரீயாக இருந்த **கேத்தரீன் வான் போரா** என்பவரை மணந்தார். **இவர் மார்ட்டின் லூதருக்கு மிகப்பெரிய உதவியாக இருந்தார்.** இவர்களுடைய திருமணம் அநேக துறவிகள் மற்றும் கன்னியாஸ்திரீகள் பின்பற்றக்கூடிய முன் உதாரணமாக அமைந்தது.

பின்நாளில், அநேகர் எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவங்களுக்கு மத்தியில் மார்ட்டின் லூதர் வேதத்தை ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்தார்.

ஒருவகையில், இது அவருடைய விலைமதிப்பற்ற வேலையாக அமைந்து, அவருடைய வாழ்க்கையில் அநேக வருடங்களையும், அதிக பிரயாசத்தையும் ஈர்த்தது.

**உண்மையில், இவர் அசாதாரணமான திறமைகளை பெற்ற அபூர்வமான மேதையாக இருந்தார்.**

அவருடைய விசேஷ குணநலன்களை நாம் கவனிக்கையில், அவர்

- வேத வசனங்கள் மற்றும் மற்ற உண்மைகளை அச்சுபிசகாமல் தன்னுடைய ஞாபகத்தில் பெற்றிருந்து....
- கர்த்தருடைய ஊழியத்தில் தான் மேற்கொண்ட எல்லா முயற்சிகளிலும் ஸ்திரத் தன்மை உள்ளவராக....
- ...தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தை வெளிப்படுத்துவதில் விசேஷித்த வாய்மொழி திறமை உள்ளவரும்,
- .....மனித பலவீனங்களுக்கு அப்பாற்பட்ட பரந்த உள்ளம் உடையவராக இருந்தார்.

உண்மையில் இந்த மாபெறும் சீர்த்திருத்தவாதி கர்த்தர் தேர்ந்தெடுத்த

**"சீர்த்திருத்தலின் தந்தையாக"** இருந்தார்.

அவருடைய நெருங்கிய நண்பரும், அவருக்கு மிக உதவியாக இருந்த உடன்வேலையாளுமான பிலிப் மேலாங்சுதான் என்பவர் எழுதின -

**"லோசி தியாலாஜிசி" (LOCI THEOLOGICI)**

என்ற புத்தகம் மார்ட்டின் லூதரால் மிகவும் பாராட்டப்பட்டது.

## 7. லவோதிக்கேயா (கி.பி. 1874 - சபை நிறைவு வரை)

சபையின் இந்த ஏழாவது காலப்பகுதி திரும்பியிருக்கும் இயேசு இராஜாவின் பிரசன்னத்தின்போது இருப்பதால் இது மிகவும் விசேஷமான காலப்பகுதியாகும்.


எனவே, சத்திய "வெளிச்சத்தை" பிரகாசிக்கச் செய்யும், கர்த்தருடைய வலது கரத்தில் இருக்கிற இந்த "நட்சத்திரம்" அல்லது "தூதன்" என்பவரும் மிக விசேஷமானவராக இருக்கவேண்டும்.

ஆம், இவரைக்குறித்து வேதவசனங்களில் நாம் வாசிக்கையில்,

**மத்தேயு 24 : 45**

**"ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன் ?"**

....மேலும், இந்த "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரனை" குறித்து வாசிக்கையில்,



**மத்தேயு 24 : 46,47**

**"எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

ஆம், 1874-ஆம் வருடம் நிறைவேறிய கர்த்தருடைய வருகைக்கு பின்பு, அவர் ஏற்படுத்தின உண்மையும் விவேகமுள்ள ஊழியக்காரன் அமெரிக்காவின், பிட்ஸ்பர்க் நகரத்தை சேர்ந்தவர்

**அவர், சார்லஸ் டேஸ் ரசல்.**

இவர் 1852-ஆம் ஆண்டு பிப்ரவரி 16-ஆம் தேதி பிறந்தார்.

மேலும், தன்னுடைய 15-ஆம் வயதில் கிறிஸ்தவ மண்டலத்தின் **விசுவாச கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு,** அதேசமயம், பகுத்தறிவுக்கு அப்பாற்ப்பட்டிருப்பதைக் கண்டார். மேலும், நித்திய வேதனை ஸ்தலமாகிய **“நரகம்” பற்றின போதனை அவரை பெரிய அளவில் பாதித்தது.** இதன்மூலம், அவர் நம்பிக்கையற்றவராக மாற நேர்ந்தது.

மற்ற மதங்களில் இதற்கான பதிலை தேடி மேலும் அதிருப்தியடைந்தவராக காணப்பட்டார்.


இறுதியில், திணிக்கப்பட்ட கருத்துக்களிலிருந்து விடுப்பட்டவராக, திறந்தமனதுடன் வேதத்தை மீண்டும் அவர் தேடிபார்த்தபோது, அவருடைய பிரயாசங்களை தேவன் ஆசீர்வதித்து போகப்போக மனிதனுக்கான

**தேவனுடைய மாபெரும் தெய்வீக திட்டத்தைக்**

குறித்து பிரகாசமான மனகண்களை பெற்றார்.

ஆம், லவோதிக்கேயா என்ற ஏழாவது சபையின் இந்த “தூதன்” மூலம் ஆபகூக் 2:2 –ல் ஆபகூக் தீர்க்கதரிசி உரைத்த தேவனுடைய வார்த்தைகள் நிறைவேறின.

ஆம், இந்த “தரிசனத்தை” வரைந்தவர் சார்லஸ் ரசல் அவர்களே.




**ஆபகூக் 2 : 2 - "அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக, நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை..."**



இவரே ஏதேன் முதல் பரலோக இராஜ்யம் வரையிலான தேவனுடைய தெய்வீக திட்டத்தை முதன்முதலில் தெளிவாக புரிந்தவர் ஆவார்.

மேலும், **"வேதவசனங்களின் மீதான ஆராய்ச்சி" (Studies in the Scriptures)** என்ற ஆறு தொகுப்புகளை எழுதி அதன்மூலம் அதை அவர் "தீர்க்கமாக" வெளிப்படுத்தினார். அதோடு, "ஆசரிப்புக்கூடாரத்தின் நிழல்கள்" என்ற சிறிய புத்தகத்தையும் எழுதினார்.

ஆம், அவருடைய ஊழியம் பெரும்பாலும் எழுத்துவேலை நிறைந்ததாக இருந்தது. இதை நாம் அவரைபற்றி வேதத்தில், எசேக்கியேல் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்தில் காணலாம்.




**எசேக்கியேல் 9 : 3**

**"...ஆலயத்தின் வாசற்படியிலே வந்து, சணல் நூல் அங்கி தரித்து, தன் அரையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனைக் கூப்பிட்டு..."**

இது ஏழாவது சபையின் **"தூதன்" – சார்லஸ் ரசல்** அவர்களை நேரடியாக குறிக்கிற வசனமாகும். ஆம், இங்கு சொல்லப்பட்டிருக்கிற விபரங்கள் அனைத்தும் கிறிஸ்தவ சபையின் வரலாற்றில் வேத வசனங்கள் அனைத்தையும் குறித்ததான விளக்கங்களை **அதிகமான பக்கங்களை எழுதினவருக்கு மிகச் சரியாக பொருந்துகிறது.**

**இவர் கிட்டத்தட்ட 50,000 பக்கங்களை 1879 முதல் 1916-ஆம் ஆண்டு வரையிலான, கிட்டத்தட்ட 37 வருடங்களில், சராசரியாக ஒரு நாளுக்கு 4 பக்கங்கள் வீதம் எழுதியுள்ளார்.**

சார்லஸ் டேஸ் ரசல் வியாபார ஸ்தாபனங்களை பல இடங்களில் ஸ்தாபிப்பதில் முன்னோடியாக திகழ்ந்தார். இவர் தன்னுடைய தந்தையோடு இந்த வியாபாரத்தில் பங்குதாரராக இருந்து, தன்னுடைய 21-ஆம் வயதில் கிட்டத்தட்ட 2,50,000 டாலர்கள் மதிப்புள்ள சொத்திற்கு சொந்தக்காரராக இருந்தார்.

ஆனால், 3 வருடங்களுக்கு பிறகு 1876-ஆம் வருடம் அவருடைய 24-ஆம் வயதில், கர்த்தருடைய பரோஷியா (பிரசன்னம்) 1874-ஆம் ஆண்டு துவங்கியிருப்பதை குறிப்பிடுகிற காலத்தீர்க்கதரிசன வசனங்களை பற்றி உணர்வுக்கு வந்தார். அதன் மூலம், இது அறுவடைக்கான விசேஷ காலம் என்பதை அவர் உணர்ந்தார்.

இப்பொழுது, ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமானது.

. **....அது தன்னுடைய வியாபார நோக்கங்களை தொடர்வதா ?** அல்லது **தன்னுடைய முழு நேரத்தையும் கர்த்தருடைய ஊழியத்தில், அறுவடை வேலைக்கு அர்ப்பணிப்பதா ?** – என்பதே, ஒருவேளை, தன்னுடைய வியாபாரத்தை தொடர்ந்திருந்தால், அவருடைய நாட்களில் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான, **ஜான் டி ராக்பெல்லர்** என்பவரைக் காட்டிலும் செல்வந்தராக இருந்திருக்கக்கூடும்.

**ஆனால், ரசல் தன்னுடைய வியாபாரத்தை விட்டுவிட்டு, முழுநேர ஊழியராக கர்த்தருடைய ஊழியத்தில் பிரவேசிக்க 1877-ஆம் ஆண்டு முடிவு செய்தார்.**

அப்போது அவருடைய சொத்தின் மதிப்பு 3,50,000 டாலர்களாக இருந்தது. அதை அவர் கர்த்தருடைய ஊழியத்திற்கு முழுவதுமாக அர்ப்பணித்திருந்தார்.

இவ்விதமாக, கிட்டத்தட்ட 42 வருடங்கள் அயராது வேலைசெய்து – கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மைல்களுக்கும் மேலாக பிரயாணம் செய்தார், இதை அவர் ஒரு வருடத்திற்கு 50,000 மைல்கள் வீதம் பிரயாணம் செய்தார்

....கிட்டத்தட்ட 30,000 தொகுப்புகளை வழங்கியுள்ளார்.

அதுமாத்திரமல்ல, அவர் தனியாக,

**“சீயோன்ஸ் வாட்ச் டவர் அன்டு ஹெரால்டு ஆப் கிரைஸ்ட் பிரசன்ஸ்”**

**(ZION'S WATCH TOWER AND CHRIST'S PRESENCE)**

என்ற மாதப் பத்திரிகையை ஆரம்பித்து, அதற்குரிய கட்டுரைகளை தாமே எழுதி வந்தார்.

..மேலும், அவர் தினசரி பத்திரிகைகளுக்கும் கட்டுரைகளை எழுதினார், சில சமயங்களில் அவருடைய கட்டுரைகள் ஒரே சமயத்தில் இரண்டாயிரம் பத்திரிகைகளில் வெளியானது. இது வாரந்தோறும் 15 முதல் 20 மில்லியன் ஜனங்களை சென்றடைந்தது.

அவர் செய்த வேலைகளில் மிக பெரியதாக,

**“தி போடோ டிராமா ஆப் கிரியேஷன்”**

**(THE PHOTODRAMA OF CREATION)** அமைந்தது.

இது உலக மனுக்குலத்தின் வரலாற்றை புகைப்படமாக காண்பிக்க எடுக்கப்பட்ட முயற்சி ஆகும். இதில் கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேலான வரைப்படங்கள் இடம்பெற்றிருந்தது. இதன் மொத்த செலவு கிட்டத்தட்ட ஒரு மில்லியன் டாலரை தொட்டது.

இதை அவர் ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில், கிட்டத்தட்ட நாலாயிரத்திற்கும் மேலான காட்சிகளில் காண்பித்தார்.

**ஆம், உண்மையில் சார்லஸ் டேஸ் ரசல் அவர்களே அந்த “...உண்மையும் விவேகமும் உள்ள ஊழியக்காரனாகவும்....”**

அதேசமயம்....

**“.....எஜமான் தன் ஆஸ்திகள் எல்லாவற்றின் மேலும், அதிகாரியாக வைத்த விசாரணைக்காரன்...” ஆவார்.**

சார்லஸ் டேஸ் ரசல் மற்றும் அவருடைய போதனைகளை பின்பற்றுகிறவர்கள், **“வேதமாணவர்கள்”** என்று அழைக்கப்படுகிறார்கள்.

இவர் மரியா ரசல் என்பவரை மணந்தார். ஆனால், இவர் ரசல் அவர்களை நியாயமில்லாத காரணங்களுக்காக பிரிந்தார். பின்நாளில் ரசலுடைய மரணத்திற்கு பின்பு தவறுகளுக்காக மனம் வருந்தினார்

**சார்லஸ் டேஸ் ரசல் -**

**1916-ஆம் வருடம் அக்டோபர் 31-ஆம் தேதி, ஒரு கூட்டத்தை முடித்துக்கொண்டு ரயிலில் திரும்பும்பொழுது மரித்தார். அப்பொழுது அவரிடம் வெறும் சில டாலர்களே மீதமிருந்தது.**

ஆம், இவர்களே கர்த்தருடைய
"வலது கரத்தில் இருந்த....ஏழு நட்சத்திரங்கள்" ஆவர்.

**உண்மையில், இயேசு கிறிஸ்துவின் சபையினுடைய ஏழு காலப்பகுதிகளுக்கும் சத்திய வெளிச்சத்தை பிரகாசிக்க கர்த்தர் பயன்படுத்திய தூதர்கள் இவர்களே.**

சபையின் ஏழு காலப்பிரிவுகளையும், அதற்கான "தூதர்களையும்" பற்றி அறிந்துகொண்ட நாம், இப்பொழுது, இதை ஆதரிக்கும் தீர்க்கதரிசனத்தை பின்வரும் வசனபகுதியில் காண்போம்,

**சகரியா 4 : 1 – 14**

**"என்னோடே பேசின தூதன் திரும்பி வந்து நித்திரைபண்ணுகிற ஒருவனை எழுப்புவது போல் என்னை எழுப்பி, நீகாண்கிறது என்னவென்று கேட்டார், அதற்கு நான் – இதோ முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன், அதின் உச்சியில் அதின் கிண்ணமும் அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப்போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது. அதின் அருகில் கிண்ணத்திற்கு வலது புறமாக ஒன்றும், அதற்கு இடது புறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவ மரங்கள் இருக்கிறது என்றேன். நான் என்னோடே பேசின தூதனை நோக்கி – ஆண்டவனே, இவைகள் என்னவென்று கேட்டேன். என்னோடே பேசின தூதன் மறு மொழியாக – இவைகள் இன்னதென்று உனக்குத் தெரியாதா என்றார், ஆண்டவனே, எனக்குத் தெரியாது என்றேன். அப்பொழுது அவர் – செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம் ? செருபாபலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய், தலைக்கல்லை அவன் கொண்டுவருவான், அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார். பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர் – செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டது, அவன் கைகளே இதை முடித்துத்தீர்க்கும், அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிவாய். அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிபார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்கு நூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது என்றார்.**

**பின்பு நான் அவரை நோக்கி – குத்துவிளக்குக்கு வலது புறமாகவும் அதற்கு இடதுபுறமாகவும் இருக்கிற இந்த இரண்டு ஒலிவமரங்கள் என்னவென்று கேட்டேன். மறுபடியும் நான் அவரை நோக்கி – இரண்டு பொற்குழாய்களின் வழியாய்த தொங்கி, பொன்னிறமான எண்ணெயைத் தங்களிருந்து இறங்கப்பண்ணுகிறவைகளாகிய ஒலிவமரங்களின் இரண்டு கிளைகள் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் இவைகள் இன்னதென்று உனக்குத் தெரியாதா என்றார். ஆண்டவனே, எனக்குத் தெரியாது என்றேன். அப்பொழுது அவர் – இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார்."**

இது சகரியா தீர்க்கதரிசி கண்ட தரிசனமாகும்.

**இது எதைக் குறிக்கிறது ?**

இது சற்று முன்புவரை நாம் பார்த்ததான- இயேசு கிறிஸ்துவின் சபை மற்றும் அதன் ஏழு காலப்பிரிவுகளும். அவைகளுக்கான ஏழு தூதர்களையும் பற்றினதாகும்.

இப்பொழுது நாம் இந்த தரிசனத்தை வரைபடத்தில் பார்த்து, பின்பு அதற்கான விளக்கப்பகுதிக்கு வருவோம்.



இங்கு, நாம் கண்ட "குத்துவிளக்கு" மற்றும் அதன் "ஏழு அகல்கள்" மற்றும் அதன் ஏழு கிளைகளும் பின்வரும் வசனத்திலும் காணப்படுகிறது –

**வெளிப்படுத்தல் 1 : 12**

**"அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன், திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும்..."**

ஆம், இதை நாம் யூதர்களுடைய ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திலும் இருப்பதாக வாசிக்கிறோம்,

**யாத்திராகமம் 25 : 31**

**"பசும்பொன்னினால் ஒரு குத்துவிளக்கையும் உண்டாக்குவாயாக, அது பொன்னினால் அடிப்புவேலையாய்ச் செய்யப்படவேண்டும், அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்படவேண்டும்."**

நாம் அறிந்தபடி இந்த "**ஏழு கிளைகளை உடைய பொன் குத்துவிளக்கு**" என்பது **இயேசு கிறிஸ்துவின் சபை** மற்றும் அதன் **ஏழு காலப்பிரிவுகளை** அடையாளப்படுத்துகிறது.



**இப்படியிருக்க,**

**இங்கு ஏழு குத்துவிளக்குகளும் அதன் "ஏழு அகல்களும்"**

**..."பொன்னிறமான எண்ணையை"**

**..."இரண்டு ஒலிவ மரங்களிலிருந்து"**

**..."இரண்டு பொன்னினாலான குழாய்களின் வழியாய்"**

**..."கிண்ணத்தில்" பெற்று**

**...அந்த கிண்ணத்திலிருந்து பொன்னினாலான ஏழு குழாய்களின் மூலம்"**

**...அந்த ஏழு கிளைகளில் உள்ள "ஏழு அகல்களுக்கு" செல்கிறது.**

**இவையனைத்தும் எதைக் குறிக்கிறது ?**

**இவையனைத்தும், ஒட்டுமொத்தமாக இந்த சுவிசேஷ யுகத்தில், சபைக்கான தேவனுடைய தெய்வீக (பொன்) வழிநடத்துதலை குறிக்கிறது.**

இந்த தரிசனத்தின் விபரம் பின்வருமாறு இருப்பதை காண்கிறோம்

## "ஏழு குத்துவிளக்குகள்"



நாம் பார்த்தபடி, இது பெந்தெகொஸ்தே நாள் துவங்கி அது நிறைவாகும் வரையிலான இயேசு கிறிஸ்துவினுடைய சபையின் ஏழு காலப்பகுதிகளைக் குறிக்கிறது. இவர்கள் தேவனுடைய **சத்தியத்தின் வெளிச்சத்தை உயர்த்தி பிடிக்கிறவர்களாக இருப்பார்கள்** என்று இயேசு கூறினது போல இருப்பார்கள்.

**"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்...."**
**மத்தேயு 5 : 14**

## "பொன்னினாலான ஏழு குழாய்கள்"

இது ஏழு காலப்பகுதிகளுக்கும் கர்த்தரால் விசேஷமாக நியமிக்கப்பட்ட **ஏழு "தூதர்களை"** குறிக்கும்.

இவர்கள் மூலமாகவே அந்த காலகட்டங்களில் சபைக்கு தேவனுடைய வார்த்தையின் சத்திய வெளிச்சம் பகிர்ந்தளிக்கப்பட்டது. இவர்கள் கர்த்தருடைய வலது கரத்தில் இருந்த "ஏழு நட்சத்திரங்களாகவும்" – கர்த்தர் பயன்படுத்திய விசேஷமான பாத்திரங்களாகவும் இருக்கிறார்கள்.



## "கிண்ணம்"

இது சபையின் **தலையாக கர்த்தர் இயேசு** நியமிக்கப்பட்டிருப்பதை மிகத்தெளிவாக குறிக்கிறது.

**எபேசியர் 1 : 22,23**

**“எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.”**

ஆம், அவரே சபையின் தலையாக இருக்கிறார்.

அவர் மூலமாகவே புது சிருஷ்டிகள் ஆவிக்குரிய ஜீவனை பெற்றுக்கொள்கிறார்கள். இது பின்வரும் வசனத்தில் தெளிவாக காண்பிக்கப்படுகிறது.

**யோவான் 15 : 5**

**“நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.”**

பார்த்தீர்களா, தெளிவாகவே உள்ளது.

ஒரு மரத்தின் தண்டானது கிளைகளுக்கு தேவையான “நீரை” தருவதும், தண்டோடு இணைந்திராத கிளைகள் ஜீவனற்றுப் போவதுபோல, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களும் தலையாகிய – இயேசுவின் மூலமாகவே ஜீவனை பெற்றுக்கொள்கிறார்கள்.

**இதையே நாம் இங்கு, அந்த ஏழு குத்துவிளக்கில் உள்ள ஏழு கிளைகளும், “பொன்னிறமான எண்ணெயை”, “கிண்ணத்திலிருந்து” பெற்றுக்கொள்வதில் காண்கிறோம்.**

இது பின்வரும் வசனத்திலும் அருமையாக காண்பிக்கப்பட்டுள்ளது.

**வெளிப்படுத்தல் 1 : 13**

**“அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்.”**

**ஆம், இங்கு தலையானவரையும், சபை மீதான அவருடைய கண்காணிப்பையும் குறித்த அருமையான காட்சியையும் காண்கிறோம்.**



## "இரண்டு ஒலிவ மரங்கள்"

இவைகள் பின்வரும் வசனத்தில் குறிக்கப்பட்டுள்ளதை காணலாம்.



**வெளிப்படுத்தல் 11:3,4**

**"என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய்.... பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே."**

ஆகையால், நாம் காண்கிற "இரண்டு ஒலிவ மரங்களும்" வெளிப்படுத்தல் 11-ஆம் அதிகாரத்தில் "இரண்டு சாட்சிகள்" என்றழைக்கப்படுகிறது.

மேலும், இவைகளின் அடையாளத்தைக் குறித்து விசேஷமானதொன்றை சகரியா 4-ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். அவ்வசனத்தை வாசிக்கையில்,

**சகரியா 4 : 13, 14**

**"அதற்கு அவர் இவைகள் இன்னதென்று உனக்குத் தெரியாதா என்றார். ஆண்டவனே, எனக்குத் தெரியாது என்றேன். அப்பொழுது அவர் – இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார்."**

ஆம், இங்கு அந்த "இரண்டு ஒலிவ மரங்களும்" "இரண்டு அபிஷேகம் பெற்றவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை காண்கிறோம்.

இவை இரண்டும் தேவனுடைய பரிசுத்த வார்த்தைகளாகிய சாட்சியைக் குறிக்கின்றது. நாம் அறிந்தபடி தேவனுடைய வார்த்தைகளை பற்றின சாட்சியானது இரண்டு பாகங்களாக,

**பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும்** உள்ளது.

**ஆம், இவைகளே வெளிப்படுத்தல் 11-ஆம் அதிகாரத்தின் இரண்டு சாட்சிகளாவர்.**

ஒருவேளை, தேவனுடைய வார்த்தைகள் எவ்விதத்தில் "இரட்டு வஸ்திரம் உடுத்தியிருப்பவர்களாக" குறிப்பிடமுடியும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்.

**வெளிப்படுத்தல் 11 : 3**

**"என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய்..."**

ஆம், தேவனுடைய வார்த்தைகள் "இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருப்பது" எப்படி சாத்தியமாகும் ?

இரட்டு வஸ்திரம் உடுத்தியிருப்பது ஒருவிதமான நிலையைக் குறிக்கும். இதை பின்வரும் வசனத்தில் காணலாம்

**சங்கீதம் 35 : 13**

**"அவர்கள் வியாதியாயிருந்த போது இரட்டு என் உடுப்பாயிருந்தது, நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரப்படுத்தினேன், என் ஜெபமும் என் மடியிலே திரும்ப வந்தது."** மேலும்.....

**யோனா 3 : 6**

**"இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான்."**

ஆம், இது......

**தாழ்த்தப்பட்ட நிலை அல்லது அவமானத்தை குறிக்கிறது.**

இங்கு, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் **தாழ்த்தப்பட்ட / அவமானத்திற்குள்ளான** நிலையில் இருந்ததாக காண்பிக்கப்பட்டிருப்பதன் பொருளை பார்க்கும்பொழுது,

இது வேதமானது ஒரு குறிப்பிட்ட காலம் -

**"ஆயிரத்து இருநூற்று அறுபது நாள்"**

தடைசெய்யப்பட்டு, பழக்கத்தில் இல்லாத எபிரெய, கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் இருந்ததைக் குறிக்கிறது.

ஆம், இவ்விதமாக, தேவனுடைய “இரண்டு சாட்சிகளும்” மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்து சாட்சி கொடுத்தனர்.

இது அந்திக்கிறிஸ்து அமைப்பின் ஆட்சி காலமாகிய – **கி.பி. 539** முதல் **கி.பி. 1799** வரையிலான காலத்தைக் குறிக்கிறது.

இந்த 1799-ஆம் வருடத்திற்கு பின்பே வேதமானது உலகின் மற்ற மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டு வல்லமையாக சாட்சி கொடுத்தனர்.

**ஆம், அந்த “இரண்டு ஒலிவ மரங்களும்” தேவனுடைய வார்த்தையின் இரண்டு பகுதிகளையே குறிக்கிறது.**

## “பொன்னிறமான எண்ணை”

இது தெய்வீக ஆசீர்வாதமாகிய **தேவனுடைய சத்தியத்தின் பரிசுத்த ஆவியைக்** குறிக்கிறது.



இது தேவனும் பிதாவுமானவரிடமிருந்து வருவதை காண்கிறோம் -

### யோவான் 14 : 16, 17

**“நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச்சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்.”**

### லூக்கா 11 : 13

**“பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறாவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக்கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.”**

ஆம், பிதாவினிடமிருந்து பெறப்படும் பரிசுத்த ஆவியானது இங்கு “பொன்னிறமான எண்ணையாக” அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

## "இரண்டு பொன்னினாலான குழாய்கள்"

இது தேவன் தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்தி, அதன்மூலம் தம்முடைய சத்தியத்தின் பரிசுத்த ஆவியை பகிர்ந்தளிக்கும் வழியைக் குறிக்கிறது.

இந்த இரண்டு "குழாய்களும்" குறிப்பது என்னவென்றால்,

### குழாய் – 1

இது பழைய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய சத்தியத்தை வெளிப்படுத்தும் வழிமுறையாகிய – **தீர்க்கதரிசனங்கள், அடையாளங்கள் மற்றும் நிழல்களை குறிக்கிறது.**

### குழாய் – 2

இது புதிய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய சத்தியத்தை வெளிப்படுத்தும் வழிமுறையாகிய – **வாக்குத்தத்தங்கள், ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் மற்றும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின்** பல்வேறு அம்சங்களை விளக்கும் விளக்கப்பகுதிகளை குறிக்கிறது.

ஆம், இந்த தரிசனத்தின் மூலம் சுவிசேஷ யுகத்தில் சபையையும், அதற்கான தெய்வீக வழிநடத்துதலையும் காண்கிறோம். அவையனைத்தும், ....எழுதப்பட்டவைகளின் மூலமாகவும் ....ஜீவனுள்ள வார்த்தையாகிய – சபையின் "தலையாகிய" இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும் அளிக்கப்படுவதை காண்கிறோம்.

இவ்விதமாக, சபையின் சரித்திரத்தை விரிவாக நாம் இன்று அறிந்துகொண்டோம். மேலும், அதை சகரியா புஸ்தகத்தின் தீர்க்கதரிசன பகுதியின் மூலம் நிரூபித்திருக்கிறோம்.

ஆம், நாம் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டிருப்பது உண்மையே.

**...ஆமென்...**

For Private Circulation Only

NOT FOR SALE

